திரு. கு. அ. செங்கோட்டையன்: பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்து நிலையத்தில் நாளொன்றுக்கு 250 பஸ்களுக்கு மேலாக வந்து செல்கின்றன. அங்கு 10 பஸ்களுக்கு மேல் நிற்க முடியவில்லை. அதன் காரணமாக அங்கு அடிக்கடி விபத்துகள் ஏற்படுகின்ற காரணத்தால், இதை அரசு உடனடியாக மீண்டும் பரிசீலனை செய்து, வேறு இடத்திற்காவது மாற்றுவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கையை கொடுத்திருக்கிறார்கள். அது அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. கா. கோபாலகிருஷ்ணன்: தலைவர் அவர்களே, பொதுவாக தமிழ்நாட்டில் எல்லா பஸ் ஸ்டாண்டுகளுமே சீராக இல்லாத காரணத்தால், இதற்கென்று தனியாக கார்ப்பரேஷன் ஒன்று அமைத்து நிவர்த்தி செய்ய அரசிடம் உத்தேசம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்போன்று உத்தேசம் அரசுக்கு இல்லை.

பாம்பாற்றின் குறுக்கே பாலம்.

*வினா எண். 314—திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கிழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள A. K. மோட்டூர் என்னுமிடத்தில் பாம்பாற்றின் குறுக்கே மேம்பாலம் கட்ட அரசு உத்திரவிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) ஆம்.

(ஆ) அரவங்கோட்டை மோட்டூர் சாலையில் கி.மீ. 5/2-இல் பாம்பாற்றின் குறுக்கே ரூ. 5·50 இலட்சம் செலவில் உயர்மட்ட பாலம் அமைக்க 1978 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் ஆணை பிறப்பிக்கப்பட்டது. இப்பாலம் 13—1-81 இல் முழுமையாக முடிக்கப்பட்டு வாகனப்போக்குவரத்துக்கு அனுமதிக்கப்பட்டுள்து.

1981 பிப்ரவரி 28]

திரு. ப. சுந்தரம்: இந்தப் பாலத்தைக் கட்டுவதற்கான ஒப்பந்தக்காரர் யார்? அந்த ஒப்பந்தக்காரருக்கும் அங்கிருக்கிற பொறியாளருக்கும் இடையே காங்க்ரீட் போடுவதில் தகராறு ஏற்பட்டு வேலை நிறுத்தம் செய்யப்பட்டது. அந்த வேலை நிறுத்தம் காரணமாக பல நாட்கள், வேலைகள், நிறுத்தப்பட்டன. அந்த கான்க்ரீட் சரியாகப் போடப்பட்டுள்ளதா, அந்தப் பாலம் நல்லமுறையில் கட்டப்பட்டுள்ளதா என்பதை அரசு ஆராயுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: மூலக்கேள்வி, பாம்பாற்றின் குறுக்கே மேம் பாலம்கட்ட அரசு உத்தரவிட்டுள்ளதா? என்பதாகும். அதற்கு, உத்தரவிட்டு பாலம் கட்டி கடந்த 13—1—1981-ல் அது திறக்கப்பட்டு வாகனங்கள் போய்க் கொண்டிருக்கின்றன. ஆகவே பொறியாளர் பற்றியும் காண்ட்ராக்டர் பற்றியும் வேண்டுமானால் தனிக் கேள்வி போடவும்.

உசிலம்பட்டி பஞ்சாயத்து யூனியன் பகுதியில் சாலைகள் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 315—திரு. எஸ். ஆண்டித்தேவர்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் உசிலம்பட்டி பஞ்சாயத்து யூனியனில் உசிலம்பட்டியிலிருந்து லிங்கப்ப நாயக்கனூர் வரை 14 மைல் ரோடும், நல்லுத்தேவன்பட்டியிலிருந்து தும்மக்குண்டு வரை 11 மைல் ரோடும் கடந்த 8 ஆண்டு காலமாக ரோடு போடப்படாமலே இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) ஆம்.

(ஆ) இந்த இரண்டு சாலைகளின் வேலைகள் 1972-73-ம் ஆண்டில் எடுத்துக் கொள்ளப்பட்டன. இலஞ்ச ஒழிப்புத் துறையினர் இவ்வேலைகளை நிறைவேற்றுவதில் குறைபாடுகள் இருப்பதைக் கண்டுபிடித்து சம்பந்தப்பட்ட ஆவணங்களை கைப்பற்றிக் கொண்டனர். இவ்வேலைகளை மீண்டும் தொடர்ந்து செய்வதற்கு அத்துறையின் அனுமதி கேட்கப்பட்டும் இதுவரை ஒப்புதல் கிடைக்காததால், வேலைகளை மேற்கொண்டு தொடர முடியவில்லை.